# மே – 19 – சனி

## புனித செலஸ்தீன் இராயப்பர்

“ நீ என்னைப் பின்தொடர்ந்து வா “(யோ 21:22)

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 28:16– 20,30 - 31**

உரோமைக்கு வந்தபோது பவுல் தனிவீட்டில் தங்கியிருக்க அனுமதி பெற்றுக்கொண்டார். ஆனால் படைவீரர் ஒருவர் அவரைக் காவல் காத்துவந்தார்.மூன்று நாள்களுக்குப் பின்பு பவுல் யூத முதன்மைக் குடிமக்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்கள் வந்துகூடியபின் அவர்களை நோக்கி, ”சகோதரரே, நான் நம்முடைய மக்களுக்கு எதிராகவோ, மூதாதையரின் மரபுகளுக்கு எதிராகவோ எதுவும் செய்யவில்லை. எனினும் எருசலேமில் நான் கைது செய்யப்பட்டு உரோமையரிடம் ஒப்புவிக்கப்பட்டேன்.அவர்கள் என்னை விசாரித்தபோது மரண தண்டனைக்குரிய குற்றம் எதுவும் என்னிடம் காணாததால் என்னை விடுதலை செய்ய விரும்பினார்கள்.யூதர்கள் அதனை எதிர்த்துப் பேசியபோது நான், ”சீசரே என்னை விசாரிக்க வேண்டும்” என்று கேட்கவேண்டிய கட்டாயத்துக்குள்ளானேன். ஆனால் என் இனத்தவர்க்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் என்னிடமில்லை. இதனால்தான் நான் உங்களைக்கண்டு பேசுவதற்காக அழைத்தேன். இஸ்ரயேல் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் பொருட்டு நான் விலங்கிடப்பட்டுள்ளேன்” என்றார். பவுல் அங்கு இரண்டு ஆண்டுகள் முழுவதும் தாம் வாடகைக்கு எடுத்த வீட்டில் தங்கியிருந்தார். தம்மிடம் வந்த அனைவரையும் வரவேற்று,இறையாட்சியைக் குறித்துப் பறைசாற்றி வந்தார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி முழுத் துணிவோடு தடையேதுமின்றிக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நேர்மையாளர்கள் உமது
திருமுகத்தைக் காண்பார்கள்.

**நற்செய்தி : யோவான் 21 : 20 - 25**

அக்காலத்தில் பேதுரு திரும்பிப் பார்த்தபோது இயேசுவின் அன்புச் சீடரும் பின்தொடர்கிறார் என்றுகண்டார். இவரே இரவு உணவின்போது இயேசுவின் அருகில் அவர் மார்பு பக்கமாய்ச் சாய்ந்து கொண்டு, ”ஆண்டவரே உம்மைக் காட்டிக் கொடுப்பவன் எவன்? என்றுகேட்டவர். அவரைக்கண்ட பேதுரு இயேசுவிடம், ”ஆண்டவரே இவருக்கு என்ன ஆகும்?” என்ற கேட்டார்.இயேசு அவரிடம், ”நான் வரும்வரை இவன் இருக்கவேண்டும் என நான் விரும்பினால் உனக்கு என்ன? நீ என்னைப் பின்தொடர்ந்துவா” என்றார். ஆகையால் அந்தச்சீடர் இறக்கமாட்டார் என்னும் பேச்சு சகோதரர் சகோதரிகளிடையே பரவியது. ஆனால் இவர் இறக்க மாட்டார் என இயேசு கூறவில்லை. மாறாக, ”நான் வரும்வரை இவன் இருக்கவேண்டும் என நான் விரும்பினால், உனக்கு என்ன?” என்றுதான் கூறினார். இந்தச்சீடரே இவற்றிற்குச்சாட்சி. இவரே இவற்றை எழுதிவைத்தவர். இவரது சான்று உண்மையானது என நமக்குத்தெரியும். இயேசு செய்தவை வேறு பலவும் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் நூல்களை உலகமே கொள்ளாது எனக் கருதுகிறேன்.

**தியானம்:** பொதுவாக பிள்ளைகளுக்கு பெற்றோர் முன் மாதிரியாக திகழ்வார்கள். அவர்களைப் போல கதைப்பது, அவர்கள் செய்வதை செய்வது என்று அவர்களைப் பின் பற்றி வாழ்வார்கள். சிலருக்கு வேறு சிலர் இருப்பார்கள். அவர்களைப் போல பேசுவார்கள், உடை அலங்காரம், சிகை அலங்காரம் செய்து கொண்டு அவர்களின் கொள்கைகளைப் பின் பற்றுவார்கள். ஆனால் கிறிஸ்த்தவர்களாகிய நாம் யாரை பின் பற்றுகின்றோம்? யாரை பின்பற்ற வேண்டும்? நாம் இறை வார்த்தையைக் கடைப்பிடிக்க வேண்டும் அதன்படி வாழ வேண்டும். இதுவே எமது கடமை. இதனை நாம் செய்கிறோமா? புனித பவுல் தமது கொள்கைப் பிடிப்போடு இருந்த போது தாம் செய்வதும், தாம் பின்பற்றுவதும் மட்டும்தான் சரி என்ற நினைப்பில், கிறிஸ்த்துவைப் பற்றி அறிவித்தவர்களையும், அவரை பின்பற்றியவர்களையும் கொன்றொழித்தார். ஆனால் உண்மைக் கடவுளையும், அவரது வார்த்தையையும் கண்டு, கேட்ட பின்பு தமது கொள்கைகளை மாற்றியது மட்டுமல்ல, அதனை இறுகப் பற்றிக்கொண்டவராக வாழ்ந்தார். தமது உயிரைக்கூட பொருட்டாக மதிக்காமல் இறை அரசை அறிவித்தார். நாம் வார்த்தையால் அல்ல வாழ்வால், சொல்லால், செயலால் இறை அரசை அறிவிக்க வேண்டும். பெயரளவில் மட்டும் கிறிஸ்த்தவர்களாக வாழாமல். உண்மைக் கிறிஸ்த்தவர்களாக வாழ்வோம்.